எனதுஇல:என்ஈபி/சிஓ/பொது-02
01.11.2001.

சுற்றறிக்கை இல 04/01

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கட்கும்,

## கூட்டுறவுச் சங்கங்களால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்த வேலைகள்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சில ப.நோ.கூ.சங்கங்களும், ஏனைய சில சிறிய சங்கங்களும் பல ஒப்பந்த வேலைகளை செய்து வருகின்றன. இவ்வொப்பந்தவேலைகளில் சில பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றின் பெயரில் பெறப்பட்டு அச்சங்கங்களின் ஈடுபாடின்றியே செய்து முடிக்கப்படுகின்றன. வேறு சில ஒப்பந்தங்களை சங்கங்கள் பெற்று உப ஒப்பந்தகாரருக்கு கமிஷன் அடிப்படையில் வழங்குகின்றன. இன்னும் சில ஒப்பந்த வேலைகள் சங்கங்களால் நேரடியாக மேற்கொள்ளப்பட்டு முடித்துக் கொடுக்கப்படாமலும், குறை வேலைகளாகவும் காணப்படுகின்றன. இவ்வாறான குறைபாடுகள் பற்றிய பல முறைப்பாடுகள் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்று ஒப்பந்த வேலைகளில் ஈடுபடும்போது கூட்டுறவுச்சட்ட நடைமுறைகளுக்கு முரணாகாதவாறு முறைப்படி வேலைகளைப்பெற்று அவற்றை சரிவர செய்து முடித்து உரிய ஒப்பந்த காரரிடமிருந்து நேரடியாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறன்றி முகவர்கள் மூலமாகவோ கமிஷன் அடிப்படையிலோ ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்போது சங்கங்களுக்கு அபகீர்த்தி ஏற்படுவதுடன் ஒப்பந்த வேலைகளை ஏற்றுச்செய்யும் தனிப்பட்டவர்கள் சங்கங்களை ஏமாற்றி இலாபத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறான செயற்பாடு நடுத்தரகர் முறையை ஊக்குவிக்குமே தவிர கூட்டுறவு முறைக்கு உகந்ததல்ல.

ஒப்பந்த வேலைகளைச் சங்கங்கள் நேரடியாகத் தமது பணியாளர்களின் அல்லது அங்கத்தவர்களின் உதவியுடன் தமது மேற்பார்வையில் செய்து முடிக்க வேண்டுமே தவிர வேறு எவ்வகையிலும் செய்தலாகாது. ஒப்பந்தம் ஒன்றைப் பெறுவதற்கும், செய்வதற்கும், இயக்குனர்சபை முறைப்படி தீர்மானம் எடுத்திருத்தல் வேண்டும்.

ஒப்பந்த வேலைகளில் நிதியை முடக்கும்போது சங்கத்தின் அன்றாட வேலைகள் பாதிக்கப்படாதிருப்பதைக் கவனிப்பதோடு சங்கநிதி துஷ்பிரயோகம் செய்யப்படாதிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். சரியான கணக்கு வைப்பு முறைகள் மூலம் ஒப்பந்த வேலைகளால் கிடைக்கப்பெறும் மேலதிகங்களை சரிவரச் கணக்கில் காட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதையும் அரியத்தருகின்றேன்.

இ.சுப்பிரமணியசர்மா,
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்(வ,கி).